இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 165 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – தை 12 – சனிக்கிழமை 25 ஜனவரி 2025 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 165 : Thiruvalluvar Year - 2056 - Thai 12 - Saturday 25 January 2025 - Madurai 16 Pages ₹ 5.00



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (24.1.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், மாற்றுக்கட்சியிலிருந்து விலகிய நிர்வாகிகள் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்ச்சியில் கழக பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், கழக மாணவர் அணித் தலைவர் இரா. ராஜீவ் காந்தி மற்றும் தலைமைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## ‘திராவிட மாடல்’ ஆட்சியின் சாதனைகளை நினைவுபடுத்தினாலே போதும்!

# 234 தொகுதிகளிலும் நாம்தான் வெற்றி பெறுவோம் !

## கழகத்தில் இணைந்த மாற்றுக் கட்சியைச் சேர்ந்த 1000க்கும் மேற்பட்டோரை

## வரவேற்று கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை !

**சென்னை, ஜன.25-**

**‘சாதனைகளை நினைவுபடுத்தினாலே போதும்! 200 அல்ல, 234 தொகுதிகளிலும் நாம்தான் வெற்றி பெறுவோம்!’ என்று கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (24.01.2025) சென்னை அண்ணா அறிவாலயத்தில் மாற்றுக் கட்சி இளைஞர்கள் கழகத்தில் இணைந்த விழாவில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்!**

**முதல்வர் அவர்களின் உரை வருமாறு:-**

பல்வேறு பொறுப்புகளை ஏற்றுக் கொண்டு, ஒரு இயக்கத்திலே பணியாற்றிக் கொண்டிருந்த நீங்கள், அந்த இயக்கத்தினுடைய தலைமை முறையாக இல்லை, அதை நம்பிச் செல்வது நமக்கு மட்டுமல்ல, தாய்நாட்டிற்கும் அது துரோகமாக அமைந்து விடும் என்று முடிவெடுத்து, அதை உணர்ந்து, நாம் யாரிடத்திலே சென்று இருக்க வேண்டும், எங்கு சென்று பணியாற்ற வேண்டும், எந்தக் கொள்கையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று, ஒரு சிறப்பான முடிவெடுத்து, இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டிருக்கிறீர்கள். அவ்வாறு இணைத்துக் கொண்டிருக்கும் நீங்கள் எல்லாம் இங்கே வந்திருப்பதைப் பார்த்து, நான் மகிழ்ச்சி அடைகிறேன், பெருமைப்படுகிறேன்.

**கழகத்தில் இணைபவர்களை - தலைவர் கலைஞர் சார்பில் வரவேற்கிறேன்!**

உங்களை எல்லாம் நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே, தலைமைக் கழகத்தின் சார்பிலே, இன்னும் சொல்ல வேண்டும் என்று சொன்னால், மறைந்தாலும் நம் உள்ளத்திலே குடியிருக்கும் தலைவர் கலைஞர் அவர்களின் சார்பிலே, வருக… வருக… வருக… என்று வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வரவேற்புரையாற்றிய ராஜீவ் காந்தி அவர்கள், சில ஆண்டுகளுக்கு முன்னால், தன்னை இந்த இயக்கத்தில் ஒப்படைத்துக் கொண்டு, தொடர்ந்து எப்படியெல்லாம் பணியாற்றிக் கொண்டிருக்கிறார், கழகத்தினுடைய மாணவரணித் தலைவராகப் பொறுப்பேற்று, அந்தப் பொறுப்பை உணர்ந்து எப்படி உழைத்துக் கொண்டிருக்கிறார் என்பதை நான் பல நேரங்களில் பார்த்திருக்கிறேன், கேட்டிருக்கிறேன். நம்முடைய மாவட்டச் செயலாளர்கள், நம்முடைய கழகத் தோழர்கள் சொல்லும் அந்தச் செய்திகளை எல்லாம் கேட்டு நான் மகிழ்ச்சி அடைந்திருக்கிறேன். இப்படிப்பட்டவர்கள் எல்லாம் இன்றைக்கு இந்த இயக்கத்திற்குக் கிடைத்திருப்பதை எண்ணி நான் மகிழ்ச்சி அடைந்தது உண்டு.

சில நாட்களுக்கு முன்பு, ராஜீவ் காந்தி அவர்கள் என்னிடத்தில் இந்தச் செய்தியைச் சொன்னார். “ஆயிரக்கணக்கான தோழர்கள் இன்றைக்கு நம்முடைய கழகத்தில் வந்து சேரக் காத்திருக்கிறார்கள்; தயாராக இருக்கிறார்கள்; அழைத்து வரட்டுமா?” என்று கேட்டார். “இந்தக் கேள்வியை நீங்கள் கேட்க வேண்டிய அவசியமே இல்லை; நீங்கள் அழைத்து வாருங்கள்; வரவேற்க நாங்கள் காத்திருக்கிறோம்” என்று நான் சொன்னேன்.

**கழகத்தைத் தொடங்கியபோது - அண்ணா எடுத்துக் கொண்ட உறுதி!**

திராவிட முன்னேற்றக் கழகம் என்பது, ஏதோ நேற்று முளைத்த காளான் அல்ல. 1949இல், திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் உருவாக்கிய நேரத்தில், வடசென்னை பகுதியில் இருக்கும் ராபின்சன் பூங்காவில் கொட்டும் மழையில் துவக்கி வைத்தபோது அவர் சொன்னார், “திராவிட முன்னேற்றக் கழகம் என்பது, ஆட்சிக்காக அல்ல; ஆட்சிக்கு வர வேண்டும் பதவியில் அமர வேண்டும் என்பதற்காக அல்ல; மக்களுக்குப் பணியாற்ற வேண்டும்; ஏழை எளியவர்களுக்குத் தொண்டாற்ற வேண்டும்; பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்டிருக்கும் மக்களுக்காகப் பாடுபட வேண்டும், ஒட்டுமொத்தத் தமிழினத்திற்காக உழைத்திட வேண்டும் என்ற உணர்வோடுதான் இந்த இயக்கம் துவக்கப்படுகிறது” என்று அறிஞர் அண்ணா அவர்கள் உறுதி எடுத்துக் கொண்டு இந்த இயக்கத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

அதற்குப் பிறகு, படிப்படியாகக் கழகம் வளர்ந்து வளர்ந்து, 1957ஆம் ஆண்டு, முதல் தேர்தல் களத்திலே நாம் ஈடுபட்டோம்.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

## மொழிப்போர்த் தியாகிகள்

# தாளமுத்து - நடராசன் நினைவிடங்கள் புதுப்பிப்பு !

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – இன்று திறந்து வைக்கிறார்!

**சென்னை, ஜன. 25 -**

**மொழிப்போர்த் தியாகிகள் தாளமுத்து மற்றும் நடராசன் ஆகியோரின் நினைவிடங்கள் புதுப்பிக்கப்பட்டு தமிழ்மொழித் தியாகிகள் நினைவு நாளான இன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்படுகின்றன.**

அதன் விபரம் வருமாறு:-

நாடு விடுதலை பெறுவதற்கு முன்பு, 1938ஆம் ஆண்டிலேயே தமிழ்நாட்டில் அனைவரும் இந்தியைக் கட்டாயமாகக் கற்றுத்தான் ஆகவேண்டும் என்ற அடிப்படையில் முதற்கட்டமாக, பள்ளிகளில் 6, 7 மற்றும் 8ஆம் வகுப்புகளுக்கு 21.04.1938ஆம் நாள் இந்தி கட்டாயப் பாடமாகக் கொண்டுவரப்பட்டது. இந்தியில் கட்டாயம் தேர்ச்சி பெற வேண்டும், இல்லையேல் அவர்கள் தேர்வில் தோல்வியுற்றவராகவே அறிவிக்கப்படுவர் என்ற அறிவிப்பும் வெளியானது. இதன் பிறகுதான் இந்தி எதிர்ப்புப் போராட்டம் வலுப்பெறத் தொடங்கியது. இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் பல தலைவர்கள் பங்கு பெற்றனர். பல கட்சிகளும் இதனை எதிர்த்துப் போராடின.



நடராசன் தாளமுத்து

நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம், தனித்தமிழ் இயக்கம் உள்ளிட்ட மக்கள் இயக்கங்கள் குறிப்பாக சர். ஏ.டி. பன்னீர் செல்வம், தந்தை பெரியார், மறைமலை அடிகளார், நாவலர் சோமசுந்தர பாரதியார், கா.சு.பிள்ளை, மு.சு. பூரணலிங்கனார், அன்னை மீனாம்பாள் சிவராஜ், ஈழத்தடிகள், பட்டுக்கோட்டை அழகிரி, மு. தருமாம்பாள், காஞ்சிமணி மொழியார், புலவர் அருணைகிரிநாதர், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், பேரறிஞர் அண்ணா உள்ளிட்ட பல்வேறு தலைவர்களும் அறிஞர்களும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

3.6.1938இல் தொடங்கிய மொழிப் போர் ஒன்றரை ஆண்டுக்காலம் தொடர்ந்து நடந்தது. இதில் மாணவர்கள் பலரும் பங்கு கொண்டனர். பல்லாயிரம் பேர் சிறை சென்றனர்.

**முதற்பலி!**

சென்னை அடையார், தியாசபிகல் பள்ளி முன்பு நடைபெற்ற போராட்டத்தில். சென்னை, பெரம்பூர் பண்ணைக்கார ஆண்டியப்பன் தெருவில் வசித்து வந்த இலட்சுமணன் - அம்மாக்கண்ணு இணையருக்கு 1919இல் பிறந்த நடராசன் என்பவர் கலந்து கொண்டதால் கைது செய்யப்பட்டார். அவருக்கு ஆறு மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. சிறையில் நோயால் பல நாட்கள் அவதிப்பட்ட அவரை 30 டிசம்பர் அன்று அரசு மருத்துவமனையில் சேர்த்தது காவல்துறை. பத்து நாட்களுக்கு மேலாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நடராசன் 1939ஆம் ஆண்டு ஜனவரி மாதம், 15ம் தேதி தமிழுக்காகத் தன்னை முதற்பலியாக்கிக் கொண்டார்.

குமாரராஜா முத்தையா செட்டியார் விருப்பப்படி மருத்துவமனையிலிருந்து தன்னுடைய சீருந்திலேயே கறுப்புக் கொடி போர்த்தி. பெரும் ஊர்வலமாக நடராசனின் பூதவுடல் எடுத்துச் செல்லப் பட்டது.

**பேரறிஞர் அண்ணா புகழுரை!**

மறுநாள் ஜனவரி 16ல் பல்லாயிரம் பேர் கலந்துகொண்ட இறுதி ஊர்வலத்தில் பேரறிஞர் அண்ணா, டாக்டர் தர்மாம்பாள், அ. பொன்னம்பலம், கு.மு. அண்ணல் தங்கோ. ஆல்பர்ட் ஜேசுதாசன், நாராயணி அம்மையார் முதலானோர் புகழுரையாற்றினர்.

நடராசனின் இழப்பு, மேலும் பலரையும் போராட்டக் களத்திற்கு அழைத்து வந்தது.

பள்ளிகளில் கட்டாய இந்திக்கு எதிரான மொழிப் போராட்டத்தில் (1937-39) முதற் களப்பலியான நடராசனுக்கு அடுத்து, இரண்டு மாதங்களில் தஞ்சை மாவட்டம், கு ம்பகோணத்தைச் சேர்ந்த வேல்முருகன் - மீனாட்சி இணையருக்குப் பிறந்த தாளமுத்து என்ற இளைஞரும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் முன்னின்று மறியல் செய்ததற்காக ஆறு மாதக் கடுங்காவலும் 15 ரூபாய் தண்டமும் தண்டனையாகப் பெற்றுச் சிறைப்பட்ட மூன்று வாரங்களுக்குள் 1939 மார்ச் மாதம், 11ஆம் தேதி உயிரிழந்தார்.

**தமிழ்மொழித் தியாகிகள் நாள்!**

மொழிப்போரின் வெற்றி வெளிச்சத்திற்கு ஒளிவிளக்குகளாய் நின்று உயிர் துறந்த நடராசன் - தாளமுத்து இருவரும் தமிழுணர்வு கொண்டோரின் மனத்தில் நீங்கா இடம் பெற்று இன்றும் நினைவுகூரப்படுகிறார்கள்.

இந்தி எதிர்ப்புப் போரில் சிறை சென்று உயிர் நீத்த தோழர்கள் நடராசன் (15.1.1939) தாளமுத்து (11.3.1939) இருவரின் தியாகத்தைப் போற்றும் வண்ணம் நினைவிடத்தை சென்னை, மூலக்கொத்தளத்தில் தந்தை பெரியார் அவர்கள் அடிகோலி திறந்துவைத்தார்.

இந்த நினைவிடத்தினைப் பொலிவேற்றம் செய்திடவும், ஜனவரித் திங்கள் 25ஆம் நாளை ‘தமிழ்மொழித் தியாகிகள் நினைவு நாள்’ என்னும் பெயரில் அரசு விழாவாகக் கொண்டாடப்படும் எனவும் அறிவித்து ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து, இன்று ( 2025 ஜனவரித் திங்கள் 25ஆம் நாளன்று) பொலிவேற்றம் செய்யப்பட்ட நினைவிடம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் திறந்துவைக்கப்படவுள்ளது.